பொது சன நூலகம்
14 APR 2000
மாநகராட்சி

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 2 வெள்ளிக்கிழமை (14 04 2000) VALAMPURI ஒலி: 17

★ ஜனாதிபதி ● முக்கிய அமைச்சர்கள் ★ எதிர்க்கட்சித் தலைவர்

# ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்

# இனப்பிரச்சனைதீர்வில்புதியதிருப்பம்

## அரசியல் ஆய்வாளர் ஆரூடம்!

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் ஜனாதிபதி சந்திரிகாவும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும், அரசின் முக்கிய அமைச்சர்கள் பலரும், பாராளுமன்ற உறுப்பினர்களும், வெளிநாடுகளுக்கு ஒருமத தகால விஜயமொன்றை மேற்கொண்டு பல்வேறு நாடுகளுக்கும் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிக்காவும், எதிர்க்கட்சித்தலைவர் ரணிலும் வெளிநாடுகளில் தங்கியிருக்கும்போது இனப்பிரச்சினை தொடர்பாக ஐரோப்பியநாடு ஒன்றில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிக்கா உட்பட அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வெளிநாடுகளுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு சென்றுள்ளார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை சென்றுள்ளார்.

இவர் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருக்கும்போது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## "சீதுவ" தேடுதலில
## 4பெண்கள்உட்பட 12 தமிழர்கள் கைது

(கொழும்பு)

சீதுவவில் நேற்று முன்தினம் இராணுவமும் பொலிசாரும் இணைந்து திடீர்த் தேடுதலை மேற் கொண்ட பொழுது 12 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வடக்குக் கிழக்கு மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்று

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மறியல்போர், சர்வமத பிரார்த்தனை
## ஒத்துழைப்பு நல்கிய மனிதநேய அமைப்புக்களுக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

யுத்தம் உக்கிரம் அடைந்துள்ள பளைப் பிரதேசத்தில் இருந்து வெளியேற முடியாதுள்ள மக்களை வெளியேற அனுமதிக்குமாறுகோரி யாழ் செயலகம் முன்பாக நடந்த சில தினங்களாக இடம் பெற்ற மறியல், மற்றும் சர்வமத பிரார்த்தனையில் கலந்து கொண்டு ஆதரவளித்தமனித

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான
## பொ. ச. ஐ. முன்னணி - ஐ. தே. கட்சி பேச்சுவார்த்தை மே 5ஆம் திகதி!

[கொழும்பு]

பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நடைபெற்றுவரும் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் மே மாதம் 5 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட விருப்பதாக அரசு, எதிர்க்கட்சி வட்டாரங்கள்

(6 பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலையில் இடநெருக்கடி
## அருகிலுள்ள வீடு பெறப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் இட நெருக்கடியை அடுத்து அருகில் உள்ள வீடு ஒன்று பெறப்பட்டுள்ளது.

இதே வேளை யாழ். சிறைச்சாலையை அமைப்பதற்கான இடம் ஒன்றைத் தெரிவு செய்து சிறைச்சாலைக் கட்டடத்தை புதிதாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் குற்றச்செயல்களுக்காக

(6 ஆம்பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டு வன்னிக்கு 238 குடும்பங்கள் சென்றன!

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த வடமராட்சி கிழக்கில் உள்ள மக்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடமராட்சிக் கிழக்கில் கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம் பெற்ற மோதல்களை அடுத்து 238 குடும்பங்களைச் சேர்ந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியின் புத்தாண்டுச் செய்தி
## சமாதானத்தை நிலைநாட்ட சகலரும் ஒத்துழைப்பு நல்க முன்வர வேண்டும்

(கொழும்பு)

புத்தாயிரமாம் ஆண்டில் நாட்டு மக்களின் நம்பிக்கைகள், அபிலாசைகள், எதிர்பார்ப்புகள் நீதியானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைய வேண்டும். அரசாங்கம் இதனை முழுமையாக உணர்ந்திருக்கிறது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா விடுத்த புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்த புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

(6 ஆம் பக்கம் பார்க்க)

★ க. பொ. த. உயர்தரத்தில் சித்தியடைந்த

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறும்

[கல்முனை]

வடக்குக் கிழக்குத் தொண்டராசிரியர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதென வடக்குகிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம் வழங்கும் நேர்முகப் பரீட்சை முடிவடைந்ததும் உயர்தரப் பரீட்சைத் தகமையுள்ள தொண்டராசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுத் தகமையுள்ள தொண்டராசிரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலய வழிபாடுகளுடன் புதுவருடம் பிறந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டில் உள்ள இந்துக்கள் ஆலய வழிபாடுகளுடன் விக்கிர ஆண்டை வரவேற்று அமைதியான முறையில் புத்தாண்டை கொண்டாடினார்கள்.

நேற்று பிற்பகல் 3-15 மணிக்கு பின்னர் யாழ்.குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் மணிகள் நாத ஒலி கிளப்ப புத்தாண்டை வரவேற்று விசேட பூசை வழிபாடுகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை வெளிவரும்

வழமையாக இன்று வெளிவரும் பொது அறிவு வினாவிடைகள் தவிர்க்க முடியாதகாரணத்தினால் நாளை வெளிவரும்.

### மட்டு. வின்சன்ட் புதிய சாதனை

# 10 மாணவிகள் 10 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கல்வி வரலாற்றில் கல்விப் பொதுச் சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை சாதனை படைத்துள்ளது.

மேற்படி பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளில் 10 மாணவிகள் 10 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

அதேவேளை மேலும் 8 மாணவிகள் 8 டி., 2 சி பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

இப்பரீட்சை முடிவுகள் குறித்து மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், அஞ்சல் தொலைத் தொடர்புகள் பிரதியமைச்சருமான எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா பாடசாலை அதிபர் திருமதி சுபாஷ்சக்கர வர்த்திக்கு பாராட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

மேற்படி பெறுபேறுகள் குறித்து அதிபர், ஆசிரியர்களுக்கு பெற்றோர்கள் மட்டத்திலும்பாராட்டுக் கிடைத்துள்ளது. (க-60)

### தனிச்சுடர் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

தனிச்சுடர் கையேட்டுப் பிரதி வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமைபிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற உள்ளது.

புனித மருத்தினர்குருமடத்தில் இடம் பெறும் இவ்வெளியீட்டு விழாவில் பல அறிஞர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அருட்சகோதரர்களின் இறையியல் சமூகவியல் மெய்யியல் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மறைந்த சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்திற்கு இந் நூல் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (க-3)

### கிளி. முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணங்கள் அனுப்பப்படும்

#### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாடற்ற கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணங்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரண தெரிவித்துள்ளார்.

இப்பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணங்கள் அனுப்பி வைக்காமையல் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியிருப்பதை இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியதையடுத்தே அமைச்சர் இந் நடவடிக்கையினை மேற்கொண்டதுடன். தம்மை சந்தித்த இலங்கைத் தமிழ் ஆசிரியர்சங்கத்தூதுக் குழுவினரிடம்இதனைத்தெரிவித்துள்ளார். (வ-க)

### வலி- மேற்கு

# பிரதேச செயலக அமைவிடம், பணிகளை மேற்கொள்ள உகந்ததாக இல்லை

## அதிகாரிகள் அதிருப்தி

[வட்டுக்கோட்டை]

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் அமைக்கப்பட்ட இடம் செயலகம் இயங்குவதற்கு ஏற்ற சூழலில் அமைக்கப்படவில்லை என அதிகாரிகள் மட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயலக அம்மவுக்கென சங்கானை சமூக சேவைகள் அமைப்பு காணி அன்பளிப்புச் செய்திருந்தது.

அக்காணியில் செயலகக்கட்டடம் அமைக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது.

எனினும் செயலகக்கட்டட அமைவிடத்தினைச்சுற்றி மீன் சந்தை, இறைச்சிக்கடைஅரிசியாலை, கள்ளுத் தவறணை என்பன அமைந்திருப்பதனால் தமது நடவடிக்கைகளைமேற்கொள்ளப் பொருத்தமான சூழல் அமையவில்லை என அதிகாரிகள் மட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் சூழவுள்ள கடைகளை அகற்றி செயலகம் தனது வழமையான பணிகளை இடையூறுகளின்றி மேற்கொள்ள ஆவனசெய்யும் நடவடிக்கையில் வலிமேற்கு பிரதேச செயலர் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. [க-உ-24]

### பலிக்களம் திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினால் வருடா வருடம் பாஸ்கா காலத்தில் ''பலிக்களம்'' என்னும் பெயரில் அளிக்கப்படும் திருப்பாடுகளின் காட்சி இம்முறை இன்றும், நாளையும், நாளை மறுதினமும் மன்ற அரங்கில் மேடையேறவுள்ளது. (செ)

### உற்சவம்ஆரம்பம்

[இளவாலை]

எள்ளங்குளம் பதிகரணவாய் வடக்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

நாளை 15ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் இறுதியாக 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். [க-12)

### வேலைகள் பூர்த்தி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய கட்டடத்தின் முதலாம் கட்ட வேலை 15 இலட்சம் ரூபா செலவில்பூர்த்தியடைந்துள்ளது.

மேலும் இரண்டாம் கட்ட வேலை கொடுப்பனவாக 15 இலட்சம் ரூபா பெறப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் வருட நடுப்பகுதியில் கட்டட வேலைகள் யாவும் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கட்டடத்துக்கான நிதியை வடபகுதிக்கான மீளக் குடியமர்வு அதிகார சபை கட்டம் கட்டமாக வழங்கி வருகின்றது, (க-16)

### நிர்வாக சபை தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் அண்மையில் அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக தலைவர் ந.சிவகடாட்சம், செயலாளர் கே.ஞானசேகரம், பொருளாளர் எஸ். கே. தங்கவடிவேல் உட்பட 21 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (க-79)

### புதிய இயக்குநர்கள்

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு ப.நோ.கூ.சங்கத்திற்கு புதிய இயக்குநர் சபையொன்றை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன் நியமித்துள்ளார்.

க.இராமச்சந்திரன் (தலைவர்)

சி. கணபதிப்பிள்ளை இ.கனகுவி. சபாரட்னம் க.குமரேசன் ஆகியோரே இயக்குநர் சபையில் இடம் பெற்றுள்ளனர்.

இதேவேளை அனலை தீவு சங்கத்தின் சீர்கேடுகுறித்து ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜன் உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தமை தெரிந்ததே.

### யாழ். உதை பந்தாட்டப் போட்டிகள் நாளை உரும்பிராயில் ஆரம்பம்

(யாழ்ப்பாணப்)

யாழ். உதை பந்தாட்ட லீக் நடாத்துகின்ற சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம் பெற உள்ளது.

உரும்பிராய் இந்துக்கல்லூரி விளையாட்டுமைதானத்தில் பிற்பகல் 4 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை 'பி' பிரிவில் சென். நீக்கலஸ் கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் கழகம் மோதுகிறது.

'ஏ' பிரிவில் சென். அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து சென். நீக்.லஸ் கழகம் மோதுகிறது

ஞாயிற்றுக்கிழமை 'பி' பிரிவில் சென் அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து, கலைவாணி கழகம் மோதவுள்ளது.

'ஏ' பிரிவில் யாழ். பல்கலைக்கழகஅணியைஎதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

### யாழ். கலாநிதி ஆ. தியாகராசா மகாவித்தியாலய பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

யா/கலாநிதி ஆ. தியாகராசா மகா வித்தியாலய பெறுபேறுகள் பின் வருமாறு.

பா. ஜெயந்தன் 7D.2C
த. அம்பிகா - 6D,3C
பே. ஹேமலதா - 4D,5C
செ. பகீரதி - 4D,5C
ந. கலைச்செல்வி - 4D,3C,3S
க. நிமலதாசன் - 3D,5C,1S
க. காண்டீபன் - 3D,5C,1S
வே. சிவதாரணி - 3D,2C,4S

### அரச சேவைக்கு

# ஆட்களைச்சேர்க்கும் போது இனிமேல் போட்டிப்பரீட்சை நடாத்தப்படமாட்டாது

## உயர்மட்டத்தில் பரிசீலனை

(கொழும்பு)

அரசு சேவைக்கு ஆட்களை சேர்க்கும்போது போட்டிப் பரீட்சைக்குப் பதிலாகக க.பொ.த (உயர்தரம்) சாதாரணதரபெறுபேறுகளை அடிப்படையாகக் கொள்வது பற்றி அரசு உயர்மட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போட்டிப் பரீட்சை மூலம் ஆட்களை தெரிவு செய்யும் போது கூடுதலான பணம் செலவாகிறது என்று சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சுட்டிக்காட்டியதையடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய நடை முறையின்படி ஆட்களை தெரிவு செய்யும் போது பரீட்சைப்பெறுபேற்றிலிருந்தே தெரிவு செய்யப்படும்.

இம்முறையினால் செலவு குறைவதோடு, வேலைப்பளுவும் குறைக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

### ஊழியர்களின் பெரும் தொகைப் பணம் இனம் தெரியாதோரால் கொள்ளை

(கொழும்பு)

புதுவருடத்தை முன்னிட்டு ஊழியர்களுக்கு வழங்குவகற்காக வங்கியிலிருந்து எடுத்து வரப்பட்ட பெரும் தொகைப் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தென்பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

பொரலஸ்கமுவ கட்டுகாம என்ற இடத்திலுள்ள எஞ்சினியேஸ் லபோற்றறி சேவிஸ் நிறுவனத்தின் பெருந்தொகைப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் புதுவருட சம்பளப் பணத்தை வங்கி வைப்பில் இருந்து எடுத்து வந்த சமயமே கொள்ளை போய் இருப்பதாகத் தெரிய வருகிறது.

சம்பளப்பணத்தை எடுத்து வந்த நிறுவன முகாமையாளரை கத்தியால் குத்திக் காயப்படுத்திய இனம்தெரியாதோர் பலமில்லியன் ரூபா பணத்தினைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார் (க)

### பளையிலிருந்து இடம் பெயர்ந்தோரை யாழ். ஆயர் சென்று பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

பளைப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் சென். நீக்கிலஸ்தேவாலயம், மிருசுவில் மாதா கோவிலில் தங்கியுள்ளவர்களை யாழ். ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் சென்று பார்வையிட்டார்.

இடம் பெயர்ந்தோரின் சுகநலன்கள் குறித்து வினாவியதுடன் ஆறுதல் வார்த்தைகளையும் கூறினார். (க)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு
★ நல் வாழ்த்துக்கள் ★
குறைந்த கட்டணத்தில் உள்நாட்டு,
வெளிநாட்டுத் தொலைத்தொடர்புகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம
ஐங்கரன் கொமினிக்கேசன்
★ உள்நாடு :- 021 - 2794
★ வெளிநாடு :- 0094 - 21 - 2794
628, கண்டி வீதி,
அரியாலை.

எங்கள் வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவர்க்கும் எமது இனிய
புதுவருட நல்வாழ்த்துக்கள்
(LOCAL AND INTERNATIONAL CALLS)
உள்நாட்டு வெளிநாட்டு நேரடித்தொலைபேசிச் சேவை
தொலை நகல் (FAX)
போட்டோ கொப்பி (FOTO COPY)
இரு இணைப்புகள் மூலம் [24] மணிநேர
(இரவு பகல் சேவை)
G, S, B, COMMUNICATION CENTRE
444, 2 NAVALAR ROAD JAFFNA
தொலைநகல் (FAX) 021 - 3430
வெளிநாடு உள்நாடு
தொலைபேசி-0094-21-3220 021-9220
0094-21-3430 -021-3430
செய்திகள் யாவும் உடனுக்குடன் உரியவர்களிடம்
-அறியத்தரப்படும்-
(சி-231)

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



புத்தாயிரம் ஆண்டே வந்தாய்
புதிய விக்கிரம வருஷமே வருகின்றாய்
புது மணம் கமழ ஒளி வீசி
தந்திடுவாய் தமிழ் மக்கள் அமைதியை.
ஆதரவாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

**ஜவுளி உலகிலே இன்றைய முன்னோடி!**

கல்யாண முகூர்த்தப்பட்டாடைகள், கூறைச்சேலைகள் இன்றும் புல சங்கமித்த இடம்

சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை கவர்ந்திருக்கும் பல வர்ண அமைப்புரெடிமெட் ஆடைகளுக்கு நாடுங்கள்

**"ராசி சில்க்ஸ்"**
70.71 எ. நவீன சந்தை
(உட்புறம்)
யாழ்ப்பாணம்

**"நல்லி சில்க்ஸ்"**
121. மின்சார
நிலைய வீதி
யாழ்ப்பாணம்
[சி-236]

---

பிறக்கும் விக்கிரம சித்திரைப்புத்தாண்டில்
தமிழர் தம் வாழ்வு பெருகிட
அகதி வாழ்வு ஒழிந்திட
பிரார்த்தித்து
அன்பர்கள்,
ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்
அனைவர்க்கும்
எமது வாழ்த்துக்கள்

## வி. கே. இராஜரட்ணம்
## V. K. RAJARATNAM
95, STANLEY ROAD, JAFFNA
(கி-222)

---

தேரேறும் தும்பிக்கையானே
காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகனே
உன்தாழ் சரணமடைந்தோம்
மலரும் புத்தாண்டில்
அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவர்க்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

## சிவகணேசன் பட்டுச்சோலை

மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
(கி-206)

---

பிறக்கும் விக்கிரம ஆண்டில் மக்கள் நலம்பல
பெற்றுவாழ வாழ்த்துகிறோம்.
விற்பனைக்கு
கால்நடை தீவனங்கள் (தவிடு, பிண்ணாக்கு)
மாஸ் வகைகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்.

## புதிய விநாயகர் களஞ்சியம்

211 A ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கி - 235)

---

## கைவிசேஷம்

**வாக்கிய பஞ்சாங்கம் (பழைய நேரப்படி)**

13. 04. 2000 வியாழன் மாலை 6 21 - 8. 13 வரை இரவு 8.25 - 10. 23 வரை 15. 04 2000 சனி பகல் 9.14 9. 39 வரை.

**திருக்கணித பஞ்சாங்கம் (புதிய நேரப்படி)**

பகல் 12. 14 - 1. 28 வரை 13.04.2000 வியாழன் பின்னிரவு 5. 00 - 6. 20 வரை 16. 04. 2000 ஞாயிறு காலை 6 33 - 8 09 வரை காலை 8. 33 - 10 09 வரை.

## புதுவருடவிழா

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இணைந்துநடாத்தும் புத்தாயிரமாம் ஆண்டு புதுவருட விழா எதிர்வரும் 16ம் திகதி நெல்லியடி வதிரி மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 2.மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் இரு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
(க-23)

---

## வந்தது வசந்தம்

தாவணிப் பூக்கள்
சாமரம் வீசி
பூவமர் வனங்கள்
பூக்கள் தூவி
தங்க இதங்கள்
பொன்னாடை சூட்டி
கண்ணீரும் யுத்தமும்
ஈழத்தில் கலந்திட
தோழமை உணர்வும்
சுதந்திர வாழ்வும்
வேளை வேதி விடிந்திட
வந்தது வசந்தம்

-புலேந்நி திலீப் ஆனந்த்-
பொறியியல் பீடம்
மொறட்டுவ பல்கலைக்கழகம்

---

## புதுவாழ்வு தந்திடுக!

புத்தாண்டே பிறந்திடுக!
புதுவாழ்வு தந்திடுக! !
புத்தாயிரமாம் ஆண்டிலே!
புதுமை பல செய்திடுக!
அகதிவாழ்வை நீக்கிடுக!
அவலவாழ்வை அகற்றிடுக!
சத்தியத்தைக் காத்திடுக!
தர்மத்தை நிலைநாட்டுக!
சாந்தியைப் பின்பற்றிடுக!
அஹிம்சை வழியிலே நடந்திடுக!
அன்பாலே அனைவரையும்
அரவணைத்திடுக!
புத்தாண்டே பிறந்திடுக!
புதுவாழ்வு தந்திடுக!

க.பிரந்தகன்
(வண்ணார்பண்ணை)

---

விக்கிரம சித்திரைப் புத்தாண்டு பிறக்கும் இவ்வேளையில் எமது அன்பர்கள், ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவர்க்கும் சத்திரத்து வைரவபெருமானின் அருள் வேண்டி சகல ஐசுவரியமும் நிரந்தர சமாதானமும் கிடைக்க பிரார்த்தித்து எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

## வேணி களஞ்சியம்

பலசரக்கு சில்லறை மொத்த
விற்பனையாளர்
சத்திரச்சந்தி கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-241)

---

மெலோடியஸ் புத்தாயிரமாமாண்டு
நல்வாழ்த்துக்கள்
எமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாயிரமாம் ஆண்டின்
நல்வாழ்த்துக்கள்

## மெலோடியஸ் மியூசிக்

303. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (கி-251)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்.

தரமான அச்சு வேலைகளுக்கு

## சரவணா அச்சகம்

ஆஸ்பத்தரி வீதி,
[சத்திரத்துச் சந்தி அருகாமை]
யாழ்ப்பாணம்.

---

புத்தாயிரம் ஆண்டில் பிறக்கும் விக்கிரம வருஷ
புத்தாண்டு தமிழ்மக்கள் வாழ்வில்
அமைதியைத்தர வாழ்த்துகிறோம்.

விற்பனைக்கு

ஐஸ்பழம் தயாரிப்பதற்குரிய குச்சி வகைகள், கிழங்கு, வெங்காயம், பொதிசெய்யும் நெற்பாக் வகைகள், மரப்பெட்டி வகைகள், றெஜிபோம் பெட்டிகள், றெஜிபோம் மட்டைகள், குளிர்சாதனப் பெட்டிக்குரிய காஸ் சிலிண்டர்கள் யுனிற் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

## ஸ்ரீராம் ★ நாதன் களஞ்சியம்

213 C ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-234)
T P 2916
Fax 2916

---

புத்தாயிரம் ஆண்டின் புது வருஷமே
வருவாய் மக்கள் நலம் காண பிறந்திடுவாய்
எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.
சிற்ப ஞான சிரோன்மணி எனும்
பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட

**சு. சரவணபவன்**

அவர்களால்

ஐம்பொன் விக்கிரகங்கள் - பொலிசிங் வேலைகள்
கருங்கல் விக்கிரகங்கள், திருவாசி - அஸ்டவந்தன மருந்துக் கவசங்கள்
கொடித்தம்ப வெள்ளி அங்கிகள் - பிறேடிங் வேலைகள்
செய்து கொடுக்கப்படும்.

# மதிவதனி

சிற்பாலயம்

## சு. சரவணபவன் ஆச்சாரி

34 பி, பிறவுண் வீதி, (கி.200) யாழ்ப்பாணம்.

## வடமராட்சி கிழக்கிலிருந்து பெருமளவுமக்கள் இடம்பெயர்ந்தனராம்

### வன்னிக்கும் சென்றதாகத் தெரிவிப்பு

(செம்பியன் பற்று)

வடமராட்சிக் கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்தநிலையை அடுத்து பெருமளவு மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளதாக அப்பகுதியிலிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

மாமுனை, செம்பியன் பற்று, தாளையடி, மருதங்கேணி, ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே கால்நடையாகவும், பேருந்துகள் மூலமும் வன்னிக்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பு, தர்மபுரம் கண்டிகுளம் போன்ற பகுதிகளில் இவர்கள் குடியேறியுள்ளதாகவும், தாம் சுகமாக இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் தமது உறவினர்களுக்கு செய்தி அனுப்பியுள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது.

(ச-42)

மாற்றுநடவடிக்கைஎடுக்கப்படும்வரை

## கொட்டடி மரக்கறி வியாபாரிகள் அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி மீன்சந்தைக்கு முன்பாக வீதியோரத்தில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சிறு வியாபாரிகளின் குடும்ப நிலைகருதி மாற்று நடவடிக்கை எடுக்கப்படும்வரை அவ்விடத்தில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வீதி யோர சிறு வியாபாரிகள் யாழ். மாநகரசபை மன்ற உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் அவர்களுடன் தொடர்பு கொண்டு தமது குடும்ப நிலைமையை விளக்கிக் கூறியதற்கிணங்க அவர் மாநகர ஆணையாளருடன் தொடர்பு கொண்டு இவ் வியாபாரிகளின் எதிர்காலம் கருதி மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரை அவ்விடத்தில் வியாபாரம் செய்ய அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(க)

## நிர்வாகிகள் தெரிவு

சுழிபுரம் மேற்கு ஐக்கிய நாணய சங்க நிர்வாகசபை தெரிவுக் கூட்டம்கடந்தசனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக சிக்கன கடன்வழங்குகூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் திரு. ச.முருகநேசன் கலந்து கொண்டார். தலைவராக திரு.துரைசிங்கமும் செயலாளராக செல்வி ப.யசோதாவும் பொருளாளராக சிவராமனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(க-39)

## பொதுக்கூட்டம்

[அரியாலை]

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்தப்பொதுக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில அதிபர் திரு.பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

[க-106]

## கம்பளையில் சிப்பாய் பலி

[கொழும்பு]

கம்பளை கொதமலைமொற கொல்லவில்கடந்தஅதி காலை 2.45 மணிக்குஇடம்பெற்றகிரனேட்வீச்சு சம்பவத்தில் ஒரு இராணுவம் கொல்லப்பட்டும் ஊர்காவற் படையினர் ஒருவரும் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர் திலகரத்தன என்றும் காயமடைந்தவர் பிரதீப் என்றும் தெரியவந்துள்ளது.

கறுப்பு முகமூடி அணிந்தவர்களே இக்கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், அவர்கள்கொல்லப்பட்டு, காயமடைந்தவர்களின் ஆயுதங்களை கைப்பற்றிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவிடங்களிற்கு இம்மாதம் 12 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 138104 ஏ | 139659 ஏ |
| 139659 பி | 141210 ஏ |
| 141211 ஏ | 141369 ஏ |
| 141369 பி | 141410 ஏ |
| 141735 ஏ | 141735 பி |
| 141747 ஏ | 141747 பி |
| 141799 ஏ | 142143 ஏ |
| 142144 ஏ | |

கோப்பாய்

| | |
|---|---|
| 143201 ஏ | 143201 பி |

நல்லூர்

| | |
|---|---|
| 127306 ஏ | 131606 ஏ |
| 135438 ஏ | 135487 ஏ |
| 135499 ஏ | 135768 ஏ |
| 139534 ஏ | 139534 பி |
| 139534 சி | 139534 டி |
| 139776 ஏ | 141293 ஏ |
| 141317 ஏ | 141317 பி |
| 141335 ஏ | 141365 ஏ |
| 141370 ஏ | 141384 ஏ |
| 151730 ஏ | 141730 பி |
| 141730 சி | 141780 ஏ |
| 141780 பி | 142102 ஏ |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 127435 ஏ | 139718 ஏ |
| 139718 பி | 139740 ஏ |
| 139767 ஏ | 14?266 ஏ |
| 141355 ஏ | 141374 ஏ |
| 141374 பி | 142106 ஏ |

நெல்லிப்பழை

| | |
|---|---|
| 135567 ஏ | 135906 ஏ |
| 135604 ஏ | |
| 135916 பி | 139574 ஏ |
| 141215 ஏ | 141215 பி |
| 141224 ஏ | 141244 ஏ |
| 141244 பி | 141244 சி |
| 141244 டி | 141260 ஏ |
| 141260 பி | 141260 சி |
| 141260 டி | 141703 ஏ |
| 141731 ஏ | 141731 பி |
| 142127 ஏ | 142128 ஏ |
| 142151 ஏ | 142151 பி |
| 142151 சி | 142151 டி |

உடுவில்

| | |
|---|---|
| 134285 ஏ | 139745 ஏ |
| 139745 பி | 139745 சி |
| 139745 டி | 141204 ஏ |
| 141204 பி | 141204 சி |
| 141255 ஏ | 141280 ஏ |
| 141325 ஏ | 141325 பி |
| 141341 ஏ | 1?1377 ஏ |
| 141732 ஏ | 141736 ஏ |
| 141736 பி | 141740 ஏ |
| 141740 பி | 141740 சி |
| 141740 டி | 141740 ஈ |
| 141756 ஏ | 141756 பி |
| 142108 ஏ | 142108 பி |
| 142131 ஏ | 142153 ஏ |
| 142153 பி | 142153 சி |
| 142157 ஏ | |

## யாழ்ப்பாணதேசியகல்விக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்விக கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விபரம் இங்கு தரப்படுகிறது.

மேற்படி கல்லூரிக்குதெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் எதிர்வரும் 18 ஆம் திகதி அன்று யா/ கோபபாய் ஆசிரியர் கலாசாலைக்கு சமூகம் அளிக்குமாறு தேசிய கல்விக்கல்லூரிப்பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

### ஆரம்பப் பிரிவு ஆண்கள்

கே.சுகுமார் சுதுமலை மேற்கு மானிப்பாய், பி.லம்போதரன் தெல்லிப்பழை எம்.வசந்தரூபன், அளவெட்டி எஸ்.முரளிதரன், குப்பிழான கே. சுதர்ஜன், கவுணியா ஆர்.சங்கரன், சண்டிலிப்பாய் பி.ராஜேஸ்வரன், கந்தர்மடம் யாழ்ப்பாணம், ரி.கிருபாகரன், சுன்னாகம் தெற்குபுன்னாலைக்கட்டுவன் என்.திருவாசகன், வரணி, கே. ஈஸ்வரகுமார், ஆனைக்கோட்டை

### ஆரம்பப் பிரிவு: பெண்கள்

பி.தீபா, நீர்வேலி, பி. கல்பனா, சுழிபுரம், கே. வளர்மதி கொடிகாமம், என். நாகேஸ்வரி, அனலைதீவு, எஸ். கலைவாணி, கரவெட்டி, என். நந்திகா, அல்வாய், ஜி. அகிலா, கரவெட்டிமத்தி, ஏ.சுசிர்ஜினி எழுதுமட்டுவாள், ஆர்.வான்மதி, உடுவில் கிழக்கு, வி.சிவாஜினி, கைதடி, எஸ். சிவேஸ் சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி பி.தயாளினி, சாவகச்சேரி, ரி.ஜெலினா, தூத் தவளை, ஏ.முகுந்தினி, வல்வெட்டித்துறை, எம்.பாரதி, சித்தங்கேணி, ரி.சுகந்தினி, இணுவில், எஸ்.சுதர்சினி, ஏழாலை, யி.றேணுகா, சுன்னாகம், எஸ்.சகுந்தலாதேவி, காங்கேசன்துறை, கே.அனுசாம்பிகை பளை,

### பிரிவு விஞ்ஞானம் ஆண்கள்

வை.பிரசன்னா, கந்தர்மடம், கே. சுதர்சன், துணுக்காய், எஸ்.பிரகாசன், சாவகச்சேரி, எம். ஜெகதரன், ஏழாலை, எஸ். அரவிந்தன், சுழிபுரம், வி. சுதாகரன, நீர்வேலி, எஸ். சுகிர்தன், எழுதுமட்டுவாழ், எஸ். செந்தூரன், சுன்னாகம், ஏ. சேந்தன், சுழிபுரம், வி ரமேஸ்குமார், சாவகச்சேரி.

### விஞ்ஞானம்: பெண்கள்

கே.வசந்தகுமாரி, புலோலி ஜி. சுபாஜினி, மொறட்டுவ. எஸ் துஷ்யந்தா, கொழும்பு-, 06, கே. யோகேந்திரி, சாவகச்சேரி, ரி. கௌசலா, ஒட்டிசுட்டான், ஆர்.காவேரி, கொக்குவில், எம். ஸ்ரீ கவிதா, கொழும்பு 06, கே.பிரணவமலர், கந்தர்மடம், ஆர். குகிலினி, சுன்னாகம், கே. வாசுகி, மன்னார், எஸ் கலைச்செல்வி தெல்லிப்பழை, என். தவமலர், கொடிகாமம், வி. சாந்தினி, ஏழாலை, கே. ஐ. அஞ்சலா, மானிப்பாய், ரி. கார்த்திகா, பருத்தித்துறை, கே. யாழினி, ஆனைக்கோட்டை, ஜி., நிவேதிதா, கந்தர்மடம், என் குமுதாயனி, கொழும்பு 06, எம். கல்யாணி, யாழ்ப்பாணம்,

### பிரிவு: கணிதம் ஆண்கள்

பி.ஜெயன், வல்வெட்டித்துறை, ரி. ரஜனிகாந்த், மாமாங்கம், மட்டக்களப்பு, வி.ரஜீபன், வேப்பங்குளம், வவுனியா, எஸ் பாலமுரளி, இணுவில், கே, திருமுருகன், கரவெட்டி,

### பிரிவு: கணிதம் பெண்கள்

ஆர். ஜெயவதனா, இறம்பைக்குளம், ரி. தர்ஷினி, வரணி, வி.பிரிய தர்ஷினி, கொக்குவில், பி. சூரியகுமாரி, வவுனியா, எம். சுதாஜினி; அரியம்பதி, பி. ஹேமா, பருத்தித்துறை, எம் மயூரதி, உரும்பிராய், கே உமாகாந்தி, அக்கரைப்பற்று எம் ஜனாத்தனி வவுனியா, ஜி ஜெ தீஸ்வரி, வவுனியா.

(தொடரும்)

## வடமராட்சி கல்வி வலயபாடசாலைகளின் க.பொ.த(சாதாரண) பெறுபேறுகள் சில

(மந்திகை)

அண்மையில் வெளியான க.பொ.த (சா/த) பரீட்சையில் வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில்பரீட்சைக்கு தோற்றி அதி உயர் சித்திகளை பெற்ற மாணவர்களின பெறுபேறுகள் பாடசாலை மட்டத்தில பின்வருமாறு.

★ பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி பரீட்சைக்கு தோற்றியோர் - 116 சித்தியடைந்தோர் - 111.

சு. சுதாகரன் 10டி பே. தினேஸ்குமார் 10டி ச. ஜெனகன் 9டி 1சி சி. ரஞ்சன் 6டி 1சி அ. சுதாபரீன 9டி 1சி சி. கௌதமன் 9டி. 1சி சி. சுதாகரன் 9டி 1சி இ. தணிகாசலன் 9டி 1சி

★ கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி பரீட்சைக்கு தோற்றியோர் 87 சித்தியடைந்தோர் 36

ச. காயத்திரி 8டி, சி. எஸ். ச. சுயசித்திரா 7டி, 2சி, எஸ் சி. ராஜாராம் 6டி, 2சி 2எஸ் அ. புகழேந்தி 5டி, 3சி, 2எஸ் ப. ரமேஸ் 5டி, 3சி, 2எஸ் ந. பாமதி 5டி, 4சி க. அனிதா 4டி, 6சி ஜெ. அகழ்ஜியா 4டி, 5சி, எஸ்

★ தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம் பரீட்சைக்கு தோற்றியோர் 67 சித்தியடைந்தோர். 47

ஜெ நிமலன் 6டி, 2சி 2எஸ் செ. சிவகுமார் 4டி, 5சி, எஸ் ஞா. கிருஷ்வி நேருலகன 5டி, 3சி, எஸ் சி. யான்ஸ் 3டி, 6சி எஸ் ச. முகுந்தவேள் 3டி, 5சி எஸ் பா. யவர்கலால் நேரு 3டி, 4சி 2எஸ் கை. ஜெகநாதன் 3டி, 4சி, 2எஸ்

★ மெதடிஸ்த பெண்கள் உயர் கல்லூரி பரீட்சைக்கு தோற்றியோர் 139 சித்தியடைந்தோர் 85

ஏ. பிரதீபா 9டி, சி. எஸ். சிந்துஜா 9டி, சி எஸ். காயத்திரி 9டி, சி பி. பத்மாஜினி 9டி, எஸ் ரி. துஷ்யந்தி 9டி, சி வி. வாசுகி 9டி, சி ஏ. அனுசியா 8டி, 2சி வி. ஜெயந்தி 8டி, 2சி ரி. கார்திகா 8டி, 2சி ரி. வாசுகி 8டி, 2சி பு. ஆர்த்தனா 7டி, 3சி பி. நிசாந்தினி 7டி, 2சி, எஸ், எஸ். துர்க்கா 7டி, 3சி ஆர். பாமினி 7டி, 2சி, எஸ் கே. குசேலகுமாரி 7டி, 2சி, எஸ்

உடுத்துறை மகாவித்தியாலயம் பரீட்சைக்கு தோற்றியோர் 17 சித்தி 9

ஞா. மயூரன் 7டி, 3சி, எஸ் ச. கஸ்தூரி 6டி, 3சி, எஸ் இ. சுஜீபன் 5டி, 4சி, எஸ் வி. அஸ்வந்தன் 4டி, 4சி, எஸ் த. சுதாகர் 2டி, 5சி, 3எஸ்

★ புலோலி அமெரிக்கன் மிசன் தோற்றியோர் 32 சித்தியடைந்தோர் 23 சி. தர்சினி 4டி, 3சி, 3எஸ் சி கோகுலபாலன் 2டி, 6சி லே. ஜெயகாந்தன் 3டி, 5சி எஸ்.

★ மருதங்கேணி மகாவித்தியாலயம் பரீட்சைக்கு தோற்றியோர் 23 சித்தி 13

சி. சிறீகாந் 6டி, 3சி, எஸ் யோ. ரவிசங்கர் 2டி, 6சி எஸ் க. சக்திநாசன் டி, 6சி, 3 எஸ் உ. உதயரமேஷ் டி, 5சி, 3எஸ்

★ அல்வாய் அம்பார் வித்தியாலயம் பரீட்சைக்கு தோற்றியோர் 9 க. சயாஜினி 3சி, 3எஸ் 3க. பர சக்தி 2சி, 4எஸ் எஸ். சத்தியா 2சி, 3எஸ்

(க-23)

## அச்சுவேலி மகாவித்தியாலயம்

தி. பிரபாகரன் 8டி, 2எஸ் சி. அஜித்தா 6டி, 3சி 5டி, 4சி, எஸ் இருவர் 4டி, 4சி, 2எஸ் ஒருவர் 3டி, 5சி 2எஸ் இருவர் 2டி, 5சி 2எஸ் ஒருவர் 1டி, 4சி, 2எஸ், 14 பேர்.

## அரச அதிபர் ஓய்வு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக கடந்த 6வருடங்களாகப் பணியாற்றிய வி.கே.பத்மநாதன் இம்மாதம் 17ஆம் திகதியுடன் தனது சேவையில இருந்து ஓய்வு பெறுகிறார்.

புதிய அரச அதிபராக இ மோனகுருசாமி நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(சு-க-60)

## ஆண்டு பொதுக்கூட்டம்

(வண்ணார்பண்ணை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறை பிரிவின்ஆண்டுப்பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்குத் தலைவர் க வி. குலரட்ணம் தலைமையில்மேற்படி காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(செ-109)

## பலாலி ஆசிரியர் கலாசாலையில் நாடகப்பட்டறை

(செம்பியன்பற்று)

எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் பலாலி ஆசிரியர் கலாசாலையில் நாடகப்பட்டறை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன.

குழந்தை ம சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நாடகப்பட்டறை சிறப்புற இயங்குவதற்கு பல ஆசிரிய மாணவர்கள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை நாடகப்பட்டறை இடம்பெற உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-42)

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஊழிற்பெருவ லியாவுள மற்றொரன்று
சூழினுந் தான் முந்துறும்-
-குறள்

# வலம்புரி

## புத்தாயிரத்தின் உதயம்

காலங்கள் ஓடுகின்றன. அவற்றோடு கண்ணீரும் கரைந்து ஓடுகிறது. இந்நிலை மாறும் மாறும் என்று எண்ணும் நிலையில் மாதங்கள் மூன்று மறைந்தோடி விட்டன. நாலாவது திங்களில் நாமின்று நிற்கிறோம். எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், யாவும் கனவாய், கற்னையாய் போவது தான் எங்கள் மண்ணின் விணைப்பயன் போலும்.

ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பது அப்பரடிகளின் வாழ்வு தரும் பாடம். அது போல் நாம் செய்த ஊ... இந்த நிலத்தைப் பாழ் செய்கின்றதோ என எண்ணத் தோன்றுகிறது.

காற்றும் மழையும் கலந்து வருவது போல் எதிர்ப்பும் ஆதரவும் கலந்து கலந்துஎம்மக்களைக்கலக்குகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் கடந்த காலங்களில் தாண்டவமாடி ஏமாற்றத்தைத் தந்து சென்று விட்டன.

ஒன்று மட்டும் தெளிவு பாகம் கேட்ட பாண்டவர் ஐந்து ஊர்கேட்டு- ஐந்து ...லம் கேட்டு எதுவும் இல்லை என்ற நி...யில் தர்ம ஒலியாக கண்ணன் வலம்புரிச் சங்கெடுத்து நாதம் செய்தான். வேண்டிய தற்கப்பால் வெற்றி வாகையும் பெற்றனர் பாண்டவர்.

அந்த நிகழ்வுகள் எங்கள் உள்ளங்களைச் சாக விடாது தழைக்கவும், தளிர்க்கவும் செய்கின்றன. பொறுத்துப் பொறுத்து வெறுத்துப் போன வாழ்வியல் ஓட்டத்தை திருப்பு முனையாக்க வேண்டும். அதற்கு இன்னும் திண்ணிய நெஞ்சம் வேண்டும். தொன்மைக்கால நிகழ்வுகள் எம்மை உற்சாகப்படுத்தட்டும். நிறைவின் விளிம்பில் நிற்கிறோம் என்ற நிறைவு வரட்டும். உறுதி, உறுதி உறுதிக்கேயோர் தலைவுண்டாயின் உறுதி, இறுதிஇறுதி என்ற புரட்சிப் புலவனை அலட்சியம் செய்யலாகாது.

துணிந்து நிற்பேரம்- தூர்ம் தொடுவானமாகா சுதந்திர காற்றைச் சுவாசிக்க- வேள்வித் தீயின் ஆகுதிகள் அற்பசொற்பமல்ல-அறம் விழித்துக் கொள்ளும்- அப்போது அகம் நிறைவு பெறும். ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோம்.

-அன்புடன் ஆசிரியர்

# விடியப் போகும் நூற்றாண்டை ஒருமுறை

# வெளிச்சம் பாய்ச்சிப் பார்ப்போமா?

நாம் பல ஆண்டுப் பிறப்புக்களைச் சந்தித்துள்ளோம். ஆனால் இம்முறை இவ்வருடப்பிறப்பு முப்பரிமாணச் சிறப்பெய்துகின்றது. ஒரு ஆண்டுப் பிறப்பாகவும், ஒரு நூற்றாண்டுப் பிறப்பாகவும் ஒரு ஆயிரம் அகவுப் பிறப்பாகவும் முவ்வழிச் சிறப்புறுகின்றது. இரண்டு ஆயிரம் ஆண்டுகளில் வாழத் திருவருள் பாலித்த கண்டறியாதவனின் பொற்பாதங்களுக்கு நன்றிகள் கோடி கோடி. இந்த நூற்றாண்டு ஒரு இருண்ட சுரங்கத்தினூடாகச் செல்லும் புகைவண்டியைப் போல் ஆகும். எனவும் கருதப்படுகின்றது. எவ்வாறெனின் நாம் ஒரு துருவத்தில் இருந்து மறு துருவத்தில் இருக்கும் ஒரு நாட்டுக்கு செய்தி அனுப்புகிறோம். அது ஒரு நொடிப் பொழுதில் அப்படியேபோய்ச் சேருகின்றது. அது எப்படி அப்படியே செல்கின்றதென்று அத்துறை சார் தொழில் நுட்பவியலாளர் தவிர்ந்த ஏனையவர்களுக்குத் தெரியாது செய்தி சென்றடைந்து கருமம் நடைபெறுகிறது. இது போலத்தான் புகைவண்டியும் பிரயாணிகளுடன் சேர வேண்டிய இடம் சென்றடைகின்றது. இடையில் என்ன கிடக்கிறது? என்ன நடைபெறுகிறது? எதனூடாகச் செல்கின்றதென்பதெல்லாம் யாவரும் அறிவதல்ல?

கடந்த நூற்றாண்டு ஏனைய நூற்றாண்டுகளை விட விஞ்ஞான சாதனைகளை புரிந்தமையை மறுப்பதற்கு இல்லை. இந்த விஞ்ஞான சாதனைகள் ஊடாக பார்க்கும் போது பூமியின் மறு துருவங்கள் வீட்டு முற்றத்திலும், அயல்கோள்கள் அடுத்த வீடு போல் வந்து விடுமோ என்று வினா எழுகிறது. அதற்குரிய விடையை விடிந்து வரும் புத்தாயிரமாமாண்டு சுமந்து வரும் போல் தென்படுகின்றது. மனிதன் பலவற்றைக் கண்டு பிடித்தாலும் ''மனிதன் எதையும் புதிதாக ஆக்கவோ எதையும் முழுமையாக அழிக்கவோ முடியாது'' என்ற கூற்றை இங்கு அலசிப் பார்க்கப் பாலது.

குரக்கனை அரைத்து றொட்டியாகவும், பிட்டாகவும் மாற்றிச் செய்யும்போது குரக்கன் தனது வடிவ இழந்து மனித உடலில் சுவையாகவும், சாதகமாகவும் செயற்பட்டாலும் குரக்கன் தனது தனித்துவத்தையும், தாய்மையையும், அடையாளத்தையும் இழந்து விடவில்லை. ஒருவேளை மனிதன் குரக்கனின் அடையாள சுவடுகளை கண்டறியாத நிலையில் இருக்கலாம் இதேபோல இரும்பை உருக்கி கத்தி, வாள் துவிச்சக்கரவண்டி, மோட்டார் வண்டிகளைச் செய்தாலும் இரும்பு தன் இயல்பை எங்கிருந்தாலும் இனம் காட்டிக் கொண்டிருக்கும்.

பூமி தோன்றிய காலத்தில் இருந்து பூமிக்கு ஈர்ப்பு விசை இருந்து கொண்டு வந்திருக்கிறது. இதை நியூட்டன் என்ற மாமனிதன் முதன் முதல் உணர்ந்து கொண்டான் அதை அவன் கண்டு பிடித்ததாலே அதற்கு முன் இருந்தவர்கள் அதைக்கண்டு பிடியாததாலே புவியீர்ப்பில் ஒரு மாற்றமும் இல்லை. ஆனால் இதனை மனிதன் சற்று எதிர்த்து செயல்ப்படுகிறான். இவை ளால் புவியீர்ப்புக்கு எதுவும்ஆன தாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. இவைகள்யாவும் மனிதன் சௌகரியமாக வாழ்வதற்கு கொடுக்கப்பட்ட இயற்கையின்'' சலுகைகள்'' இயற்கையை எதிர்த்து மனிதன் ஈட்டிய ''வெற்றிகள்'' அல்ல.

ஒரு மனிதன்தான்ஒருபெரிய யானையைக் கட்டியிழுத்து வெல்லும் ஆற்றல் கொண்டவனென்று உலகுக்கு நிருபிக்க வேண்டுமானால் அவன் ஒரு யானையை அவனுடைய முழு உருவத்திற்கும் பலத்திற்கும் வளர்த்து பின் அதை தன்னால் கட்டியிழுத்து வெல்ல முடியுமென்று நிருபிக்கவேண்டும். இதே போலத்தான் இயற்கையும் தான் வலுவுடையது என்பதைக் காட்ட மனிதன் ஆற்றலை, அவனூடாக விஞ்ஞானம் என்ற போர்வையில்மிக அபரிதமாக வளர்த்து அந்த வளர்ச்சியடைந்த விஞ்ஞானத்தாலும், தன்னை வெல்ல முடியாதென்று காட்ட அந்த மெஞ்ஞான இயற்கைதான் இந்த விஞ்ஞானத்தைவளர்க்கும். இதையிட்டு மனிதன் பெருமிதமோதடுமாற்றமோ அடையக்கூடாது இவ்வளர்ச்சிகளைநோக்கும்போது பரமன் படைத்தலையும் காத்தலையும் அழித்தலையும் மனிதனிடம்ஒப்படைத்துவிட்டானோ என்று எண்ணத் தோன்றுகிறது. இதற்குரிய விடை வயோதிப நிலையில் அறிவதை விட சிறுவயதிலேயே கிடைக்குமாயின் துயர் நிறைந்த பாதை பூரணமாக மூடிக் கொ...கின்றதல்லவா? எது எப்படி அமையினும் இயற்கையே நீ. எனவே எவனது சேவகனாக மாறாமல், அனைவரதும் எசமானாக என்றென்றும் இருந்து கொள்வாயாக.

ந.சடாதரன்
ஆசிரியர்
யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

## புத்தாண்டே தமிழர்க்கு புதுமை, பொறுமை,நிறைவு தருவாய்

துமைபெறும் தமிழ்ப் புத்தாண்டே
புதிய நல் வாழ்வினைத் தருவாய்
முதுமை வாழ்வில் முடங்கியிருக்கும் நம்
முதியோர்க்கு நல் வாழ்வு தருவாய்
வறுமை கொண்டு வாடும் நம்
வம்சத்தவர்க்கு நல் வாழ்வு தருவாய்
பொறுமையோ டிருக்குமவர் வாழ்வு
பொலிவு பெறச் செய்திடுவாய்

குப்பிளான் ஆ.மோகன்

## அமைதிக்கு வழி தருவாய் புத்தாண்டே!

மக்களது மனங்களிலே
மகிழ்வதுவே பொங்கிவரத்
தக்கதுவாம் தீர்வதனைத்
தந்தேயித் தரணியிலே
திக்கெல்லாம் அமைதிநிலை
தவழ்ந்திடவே வழியமைக்க
விக்கிரம ஆண்டேயுன்
வரவுநல் வரவாகுகவே!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

## பூமியை பார்த்திடும் புதிய சித்திரை

மரகத பூமியில் மலர்ந்திடும் சித்திரை
மக்களின் வாழ்வில் அமைதி பொழிந்திடும்
நிலவென மலர்கின்ற சித்திரை புத்தாண்டு
நீம்மதி பெருகிட வாழ்வு தந்திடும்.
அலை போல் குமுறிடும் வறுமை
அகன்றிட சித்திரை ஆறுதல் விளம்பும்
மலை போல் வளர்ந்திடும் ஏழ்மை
மறைந்திட சித்திரை ஆறுதல் விளம்பும்
புதிய வசந்தம் உரிமைகள் வென்றிட
பூக்கும் சித்திரை புதுமைகள் பொழிந்திடும்
விதியை மாற்றும் வெற்றிகள் குவிந்திட
வெளிச்சக் காற்றை சித்திரை மொழிந்திடும்
பூமியில் வாழும் தமிழினம் புன்னகைத்திட
பூக்கும் சித்திரையில் தமிழினம் பூரிக்கும்
காணியும் நிலமும் கானங்கள் சுவைத்திட
களித்திடும் சித்திரை தமிழ்நிலம் பார்க்கும்.

- நல்லை அமிழ்தன்

## பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் விரும்பிய இடங்களுக்கு செல்லலாம்

### படையினர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான பிரதேசங்களுக்கு செலவது தொடர்பாக பலாலி பாதுகாப்புப்படைத் தலைமையகம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்கள் தாம்விரும்பிய பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு பாதுகாப்பு படையினர் அனுமதிக்கவில்லை என தவறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

தாம்விரும்பிய எந்தவொரு பாதுகாப்பான பிரதேசத்திற்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து செல்லமுடியும்.

பொதுமக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவது தொடர்பாக பாதுகாப்புப் படையினர் எந்தவொரு ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையின் முக்கிய பகுதிகளை பலாலி இராணுவ சேவையிலும் அடிக்கடி ஒலி பரப்பி வருவது குறிப்பிடத் தக்கது. (க-உ)



## தவக்கால சிந்தனை

### 38 ஆம் நாள்

போலிகள் உண்மைகளை மறைக்கும் காலமிது உண்மை வடிவில் பல போலிகள் எம் சமூகத்தையும் எம் வாழ்வையும் தனி மனிதனின் உறுதியான மனத்தையும் ஆட்டம்காண வைக்கிறது. யேசு இறைமகன் என்பதும் அவர் காட்டிய பாதையே சரியான பாதை என்பதை அறிந்தும் அதை ஏற்றுக்கொள்ள அப்பாதையில் வாழ மனமில்லாதவர்களாகக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று போலியான சந்தோஷங்களுக்குள்ளும் சிறிய இன்பங்களுக்குள்ளும் எம்மை புதைத்துக் கொண்டு வாழ்கின்றோம். ரியூசன் கலாசாரம் எம்மை இறைவனின் பலி வாழ்வில் கூட பங்குபெற முடியாமல் செய்து விடுகின்றது. குடும்பமாக இருந்து செபமாலை சொல்ல வேண்டிய நாம் ரி.வி. முன் உட்கார்ந்து குடும்பமாக பல மணி நேரங்களைச் செலவழிக்கின்றோம் இன்னும் மதுவுக்குள்ளும் ஒழுக்கக் கேடான செயல்களுக்குள்ளும் மூழ்கிக் கிடப்போரும் எம் மத்தியில் இல்லாமல் இல்லை. இத்தகைய போலிகளிலிருந்து மனமாற்றமடைந்தவர்களாக யேசுவின் வழி ஒழுக்கமான வாயில் வழியே செல்ல முற்படுவோம்.

டிலாந்தி
பாண்டியன் தாழ்வு

★ திருமலை "மக்கேஸியர் ஸ்ரேடிய" குண்டுவெடிப்பு

# பலியானோர் காயமடைந்தோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளது

## 8 பேர் பலி 81பேர் படுகாயம் 16பேர் கவலைக்கிடம்

(திருமலை)

திருமலை மக்கேஸியர் ஸ்ரேடியத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின் போது இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 8 ஆகவும் காயப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆகவும் உயர்ந்துள்ளது.

காயமடைந்தவர்களில் 16 பேரின் நிலமை கவலைக்கிடமாகவுள்ளது. இவர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கவலைக்கிடமாகவுள்ளவர்களில் 7 பெண்களும் 12 வயது 9 வயது நிரம்பிய ஆண் சிறுவர்களும் அடங்குவர்.

நேற்று முன்தினம் இரவு இசை நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே இக்கோர சம்பவம் நிகழ்ந்ததென வாசகர் தெரிந்திருந்ததே.

திருமலை பொலிஸாரின் தீவிர புலன் விசாரணைகளின் பின் சக்தி வாய்ந்த கிரனேட் வீச்சினாலேயே இவ் அனர்த்தம் நிகழ்ந்ததாக தெரியவருகிறது. (வ)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு பல்கலை மாணவர் உதவிப் பொருட்கள் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மிருசுவில் பகுதியில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கினர்.

பால்மாப் பைக்கற்றுக்கள், சீனி, பாத்திரங்கள், மருந்து வகைகள், உடுபுடவைகள், சோப் போன்ற பொருட்களை மிருசுவில்சென்நீக்கிலஸ் தேவாலயத்திலுள்ள 25 குடும்பங்களுக்கும் கொடிகாமம் பாடசாலையில் உள்ள 55 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளனர்.

### யாழ். சிறைச்சாலை--

கைதாகும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்தே புதிதாகச் சிறைச்சாலை அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். சிறைச்சாலை முன்னர் யாழ் கோட்டைக்குள் அமைந்திருந்தது. அதனை மீண்டும் அங்கே அமைப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

### பொ-ச.ஐ.முன்னணி--

தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி உட்பட முக்கிய அமைச்சர்களும் எதிர்க்கட்சித் தலைவரும் வெளிநாடு சென்றிருப்பதால் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பேச்சு வார்த்தை மே மாதம் 5 ஆம் திகதி நடைபெறுமென தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (வ - வி)

### ஒத்துழைப்பு..

நேய சகலஅமைப்புக்களுக்கும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுச் செயலாளர் திரு எஸ். பரமநாதன் நன்றி தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்.

சர்வதேச சமூகத்தையும் விழிப்படையச் செய்யும் அளவுக்கு முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டத்திற்கு மனிதநேய அமைப்புக்களின் ஒத்துழைப்புக்கும், பொது மக்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் கூறியுள்ளார். (வ)

### சிதுவ...

இவர்களில் நால்வர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவமும் பொலிசாரும் வீடுவீடாகச் சென்று தேடுதல் நடத்தியபோதே இக்கைதுகள் இடம்பெற்றதாக தெரியவருகிறது. (வ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 16ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாட்கள் தொடர்ந்து நடைபெறும் திருவிழாவின் போது 25ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 26ம் திகதி தேர்த்திருவிழாவும் 27ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 28ம் திகதி திருக்கல்யாண சிறப்புப் பூஜை விழாக்களும் நடைபெறவுள்ளன.

இத் திருவிழாவில் முருகப்பெருமான் அடியார்கள் யாவரும்பங்குகொண்டு அருள் பெற்றேகுமாறு வேண்டப்படுகிறார்கள். (வ-வி)

### ஆலய :,

இடம்பெயர்ந்த மக்களின் நலனுக்காகவும் இறைவனைப் பிராத்தித்தனர்.

இதேவேளை புதுவருடதினமான நேற்று மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமான் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சித்திரத் தேரில் பவனி வந்து மக்களுக்குத் தரிசனம் கொடுத்தார். [வ]

### ஐரோப்பிய----

கண்சிகிச்சையை மேற்கொள்வாரென ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் தெரிவித்ததுடன், இனப்பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களுடன் பேசுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஏற்கனவேதிட்டமிட்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் உள்நாட்டில் காணப்பட்ட அசாதரண சூழ்நிலையில் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது தெரிந்ததே.

அரசின் முக்கிய அமைச்சரான நீதிஅரசியல் அமைப்பு இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அமைச்சர், ஜெயராஜ் உட்பட மற்றும் சில முக்கிய அமைச்சர்களும், அரசஎதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு மாத கால சுற்றுப் பிரயாணத்தைமேற்கொண்டுள்ளனர்.

இதேவேளைஎதிர்க்கட்சித் தலைவர்ரணில்விக்கிரமசிங்க இந்தியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு ஏற்கனவே விஜயம் செய்துள்ளார்.

பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைய இருப்பதனாலேயே இவர்கள் வெளிநாட்டு சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

தொடரும் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு-

★ லெப். கேணல் மதன் அரசன் (துரைச்சாமி சுந்தரலிங்கம்) வவுனியா

★ மேஜர் மாகோ / புகழ் அரசன் (அருளானந்தம் ஸ்ரீபன்) மன்னார்

★ கப்டன் பழந்தமிழன் (மகேந்திரன் பாஸ்கரன்) யாழ்ப்பாணம்

★ 2 ஆம் லெப். மலரவன் (சண்முகலிங்கம் மோகனதாசன்) மல்லாவி

வீரவேங்கைகளான

★ கௌசலன் (பேரின்பராசா உதயகுமார்) மட்டக்களப்பு

★ ஜெயந்தினி (சுப்பிரமணியம் மகேந்தினி) [illegible]

★ [illegible] [illegible] திருமலை

★ விண்நிலா (மரியாண்டியன் புஸ்பராணி) கிளிநொச்சி

★ சாந்தி சங்கவி (மயில்வாகனம் சிவதர்ஷினி) கிளிநொச்சி

சிறப்பு எல்லைப்படை வீரர்

★ 2 ஆம் லெப். ராஜீ (செல்வரட்ணம் கிளிர சா) மட்டக்களப்பு

இதேவேளை கடந்த 10 ஆம் திகதி திருமலை மாவட்டத்தில் இராணுவத்தினருடனான மோதலில்

★ மேஜர் டினேஸ், திருநங்கன் (பூபாலபிள்ளை ரகுநாதன்) மட்டக்களப்பு

★வீரவேங்கை கலாதரன் (ராஜரெட்ணம் ராஜேஸ் [illegible] 57)

## தவறுதலாக கிரனேட் வெடித்ததில் இராணுவச் சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை கிரனேட் தவறுதலாக வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அனுராதபுரத்தைச்சேர்ந்த வன்னிநாயக்கா (வயது 21) என்பவரே பலியான இராணுவச் சிப்பாயாவார்.

பதுங்கு குழிக்கு அருகில் நித்திரையில் இருந்தபோது தலைமாட்டில் இருந்த கிரனேட் வெடித்தே இவர் பலியாகியுள்ளார்

வவுனியா மாவட்டப் பதில் நீதிவான் எம். சிற்றம்பலம் மரண விசாரணைகளை மேற்கொண்டு தவறுதலான விபத்தால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்தார். (வ-ச-103)

## வவுனியாவில் தமிழ்-சிங்கள புதுவருடம் சிறப்பாக நடைபெற்றது

(வவுனியா)

இடம்பெயர்ந்த மக்கள் நிரம்பிய வவுனியா மாவட்டத்தில் இம்முறை தமிழ் சிங்களப் புத்தாண்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

குறிப்பாக ஆலய தரிசனம் இம்முறை மிகவும் சிறப்பாக நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்முறை இப்புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது எந்தவித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

[ ]

### சமாதானத்தை .-

பெரும்பான்மை மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இனப்பிரச்சினை குறித்து எமது அரசு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு வார்த்தையில்ஈடுபட்டு வருகின்றது. இந்தப் பேச்சுவார்த்தை பயன் உள்ளதாக அமைய வேண்டும். சமாதானத்தை நெருக்கமாகக் கொண்டு வருவதற்கு இலங்கையர் அனைவரும் முன்வர வேண்டும் என்பது எனது விருப்பமாகும்

நாட்டில் பயங்கரவாதம் எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை ஒழித்துக்கட்டி சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு சகல சமூகங்களும் மத, அரசியல் வேறுபாடு இன்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். (வ-ச-07)

## திருச்சிலுவை வழிபாடு

யாழ் அடைக்கல மாதா ஆலயத்தில் இன்று ஆரம்பம் வெள்ளிகிழமை மாபெரும் திருச்சிலுவை வழிபாடும் திருவனமும் யாழ் ஆயர் தலைமையிலான திருப்பலியும் இடம்பெறும். (வ-ச)

### புலிகளின்----

876 பேர் வன்னிக்கு புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த மக்களை கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் பொறுப்பேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறது.

இதேவேளை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இந்த மக்களுக்கு வேண்டிய நிவாரண பொருள் உதவிகளை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ 07)

### தொண்ட...

யர்களின் விபரங்களை சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களிடமிருந்தும் வடக்குக் கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கே. மகாலிங்கம் கேட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயலட்சுமி பீடில்

சாவகச்சேரியைச் சேர்ந்த ஜெயலட்சுமி பீடில் 13-4-2000 வியாழக்கிழமை கர்த்தருக்குள்ளாய் மறுமைக்குள் பிரவேசித்து விட்டார் அன்னார் காலஞ்சென்ற நவசிவாயம் பீடிலின் (T. T A.திருகோணமலை),அன்பு மனைவியும் நவறஞ்சினி [மட்டக்களப்பு] ஜெயரஞ்சன், ராஜகுமார் [அவுஸ்ரேலியா] ரதினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரேமராஜன் (இலங்கை வங்கி முகாமையாளர், கல்முனை) ராஜி, மீனா (அவுஸ்ரேலியா) மோகன் [லண்டன்], ஆகியோரின் அன்புமாமியாரும் கல்யாணி, நவீன், அகல்யா, நிரோஜன், மிதிலா, ஜெனனி, கோகிகன் அகிலன், பிந்து, ரொஸ்னா ஆகியோரின் பேத்தியும் ஜெயமணி கிருபைநாயகம் [அவுஸ்ரேலியா], அன்னலட்சுமி எவேட்ஸ், காலஞ்சென்றவர்களான ஜெயவீரசிங்கம், தனபாலசிங்கம்,குலராஜசிங்கம், பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 14-04-2000வெள்ளிக்கிழமை பிற்பகல்2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இதனை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்
ரஞ்சன் பீடில்
(மகன்)

தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி
(302)

## முக்கிய அறிவித்தல்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் இன்ரறட் கழகத்தால் 15-04-00 குலுக்கப்பட இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால்27-5-00 அன்றைய திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. இதன் முடிவுகள் 28-05-00அன்று பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

இன்ரறட் கழகம்
கொக்குவில் இந்துக் கல்லூரி

(303)

இப்பத்திரிகை ''வலம்புரி)'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தி 2000ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது